# விஞ்ஞான நிரூபகங்கள் மூலம்
# வேத கால ஞானங்களின்
# உலக வாரியான மறு விளிப்பு

சனாதன தர்மத்தைக் கடைப்பிடிப்பவர்களே,
விளியுங்கள்!

(P1)

இந்த சிறு பிரதியில் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்....

- ஐயாயிரம் வருடங்களுக்கு முன்னால் தற்போது இந்தியா என்றழைக்கப் படும் பாரத வர்ஷமே இந்த உலகம் முழுவதற்கும் தலை நகரமாக இருந்தது. அப்போது வேத தர்மம் என்ற ஒரே மதம் தான் இருந்தது. வான சாஸ்திரம், விஞ்ஞானம், ஆயுர்வேதம்(வைத்தியம்), அரசியல், கணிதம் போன்ற அனைத்து ஞானங்களும் இந்தியாவிலிருந்து மற்ற நாடுகளுக்கு வாணிபம் மற்றும் அரசியல் தொடர்புகளால் தன் எல்லைகளைத் தாண்டி வெளியே பரவியது.

- நாகரீகம் முதன் முதலில் இந்தியாவிலேயே தோன்றியது. மேற்கத்திய நாடுகளில் அல்ல. மேலும், மேற்கத்திய வரலாற்று ஆசிரியர்கள் நம்மை 10,000 ஆண்டுகளுக்கு முன்னால் மனிதன் குகைகளிலும், மரங்களிலும் வசித்தான் என்று நம்ப வேண்டுகின்றனர். ஆனால் அது சரியல்ல. வேத நாகரீங்கள் அதற்கு வெகு காலங்களுக்கு முன்னவே இருந்தன. மகா பெரும் முனிவர்கள் தங்கள் மேன்மையான வான சாஸ்திரம், கணிதம் மற்றும் முக்கோணவியல்களின் மூலம் அண்ட சராசரங்களில் இருக்கும் நட்சத்திரங்களைக் கண்டறிந்தனர்.

- மகாபாரதப் போர் ஒரு பெரிய உலகப் போர். அதில் நவீன விஞ்ஞானிகளும் கூட ஆச்சரியப்படும் வகையில் மேம்பட்ட ஆயுதங்களை உபயோகித்துள்ளனர். அந்த உலகப் போரில் முக்கியமானவர் ஸ்ரீ கிருஷ்ணர். அப்போது அரசியல் மற்றும் நாத்திகக் குழப்பங்களால் மிகுந்திருந்த உலகத்தை அவர் சரிபடுத்தினார்.

- வேத கால முனிவர்கள் ஜடவுலக விஞ்ஞானத்தை, இறைவனை மேலும் அறிய வேண்டி மட்டுமே படித்தனர். மாறாக தற்கால விஞ்ஞானிகளோ அவற்றை இறைவனின் சிருஷ்டி என்று நம்ப மறுக்கின்றனர். வேத கால முனிவர்கள் சாஸ்திரங்களை மாதா மாதம் கூலி வாங்கிக் கொண்டு எழுதவில்லை. பௌதீகம், இரசாயனம் போன்ற அனைத்து ஞானங்களும் அவர்களது விரல் நுனியில் இருந்தும் கூட, அவர்கள் அவற்றால் உலகத்தைச் சேதப்படுத்தும் தொழிற் சாலைகளையும் அணுசக்தி நிலயங்களையும் உண்டு பண்ணவில்லை. ஜடவுலக விஞ்ஞானம் உடலுக்கு ஓரளவு மகிழ்ச்சியை அளித்தாலும் அது ஆத்மாவுக்கு ஒருபோதும் மகிழ்ச்சியை அளிக்கவே முடியாது என்பதை வேத கால முனிவர்கள் மிக நன்றாக அறிந்திருந்தார்கள். எனவே, தங்கள் நேரம், பொருள், வேலை எதையுமே ஜட வீஞ்ஞான ஆராய்ச்சியில் செலவளிக்கவில்லை. விஞ்ஞான வளர்ச்சியை மிகவும் சொற்ப அளவில், எளிமையான, வாழ்க்கைக்குத் தேவையான அளவுக்கு மட்டுமே உபயோகப் படுத்தினர். அவர்களது பெரும் பாலான மூளையும் ஆத்மாவைப் பற்றியும் இறைவனைப் பற்றிய ஞானங்களிலும் மட்டுமே செலவளிக்கப் பட்டது.

- நீங்கள் நம்புவீர்களோ அல்லது நம்ப மாட்டீர்களோ - இன்று கூட இந்தியாவின் பலம் அனைத்தும் ஸ்ரீ கிருஷ்ண பக்தர்களிடமிருந்தே தான் நம் கண்களுக்குத் தெரியாமலே வருகின்றன. அவை அரசியல்வாதிகளிடமிருந்தோ, நவீன கம்பியூட்டர் விஞ்ஞானிகளிடமிருந்தோ, அணுசக்தி விஞ்ஞானிகளிடமிருந்தோ வரவில்லை. ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் வரையிலும் இந்தியாவே உலகத்தின் மிகவும் செல்வம் கொழித்த நாடாக விளங்கியது. இந்த இந்தியாவையே கிறிஸ்டோபர் கொலம்பஸ் அடைய விரும்பி, ஆனால் தவறுதலாக அமெரிக்காவை அடைந்தார். மாபெரும் மன்னர் அலக்ஸாண்டர் கூட இந்தியாவின் வேத கால நாகரீகத்தைப் பார்த்துப் பரவசமடைந்து, அங்கிருந்து பற்பல அறிஞர்களை தன் நாட்டுக்கு அழைத்துச் சென்றார். சென்ற ஆயிரம் வருடங்களாக முகமதிய

மற்றும் ஆங்கிலேய ஆதிக்கங்கள் இந்தியாவைச் சின்னா பின்னமாக ஆக்கியுள்ளன. இருந்தும் கூட, இந்தியாவே தேவர்களும் முனிவர்களும் வாழும் நாடாக இன்றும் விளங்குகிறது.

- இந்தியாவில், மக்கள் வேத நெறிகளிலிருந்து விலகி, நாத்திகமும் லௌகியமும் மேலெழும்பியதால், இந்தியாவின் பொருளாதாரம், அரசியல் அனைத்தும் அழுக ஆரம்பித்தன. அந்தப் பலவீனங்களை உபயோகப் படுத்திக் கொண்டு அயல் நாட்டிலிருந்து மிலேச்சர்கள் இந்தியாவைக் கைப்பற்றி ஆட்சி செய்து தங்கள் மிலேச்ச தர்மங்களை இந்தியாவில் திணித்தனர். உலகெங்கும் வாழும் ஒவ்வொரு இந்தியனும் இதைப் பாடமாகக் கொண்டு உத்தமமான வேத நெறிகளைத் திரும்பவும் மேலே கொண்டு வேண்டும். 500 வருடங்களுக்கு முன்னால் தோன்றிய ஸ்ரீ சைதன்ய மகாபிரபு, நாம சங்கீர்த்தன சகாப்தத்தைத் தொடங்கி வைத்து இன்னும் 5,000 வருடங்களுக்கு வேத நாகரீகம் திரும்பவும் மேல் நிலையை அடையும் என்று ஆசீர்வதித்தார். ஸ்ரீ கிருஷ்ணரிடம் சுத்தமான பக்தி மேலோங்கி, இந்தியா குப்பையிலிருந்து வெளிவந்து திரும்பவும் அதன் பழைய மகிமைகளை அடையும் என்று உறுதியளித்தார்.

மேலும் கடந்த 400 வருடங்களாக, இந்திய வேத நாகரீகத்தை சீர் குலைத்து ஆள்வதற்காக, ஆங்கிலேயர்களால் புத்திசாலித்தனமாகத் திட்டமிட்டு "ஆரியர்களின் படையெடுப்பு " என்ற பெயரில் கட்டுக் கதைகளைச் சரித்திரத்தில் புகுத்தி, இந்தியர்களையும் இந்தியப் பண்பாடுகளையும் வேத சாஸ்திரங்கள் அனைத்தையும் முட்டாள் தனமாகக் கேலிப் பொருட்களாக ஆக்கினர்! ஆனால் அதை விடவும் விசித்திரம் என்னவென்றால், இன்று கூட அந்தக் கட்டுக் கதைகளை உண்மை என்று நம்பும் அப்பாவி இந்தியர்களும் உள்ளனர்! ஆங்கிலேயர்கள் இந்தியர்களைப் பிரித்ததன் விளைவை இன்றும் கூட நாம் அவர்கள் கற்கும் கல்விகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

- ஸ்ரீ பகவத் கீதை, ஸ்ரீமத் பாகவதம் மற்றும் வேத சாஸ்திரங்களில் ஸ்ரீ கிருஷ்ணரைப் பற்றியும் அவரது அற்புதமான செயல்களைப் பற்றியும் விவரிக்கப் பட்டிருப்பவைகள் "பாட்டி சொல்லும்" கட்டுக் கதைகளல்ல. அவை உண்மையில் நடந்த சரித்திரங்கள்! ஆங்கிலேயர்கள் அழைத்தது போல் அது "மைத்தாலஜி(Mythology) " அல்ல.

- வேத சாஸ்திரங்களில் விவரிக்கப் பட்டுள்ள பற்பல விஷயங்களை நிரூபிக்க தற்போதுள்ள விஞ்ஞானத்திற்கு இன்னமும் சக்தியேயில்லை. அவற்றை நேரடியாக உணர்ந்து கொள்வதைத் தவிர வேறு வழியே கிடையாது. விஞ்ஞானம் வழியாக அவற்றை ஒருபோதும் அறியவும் இயலாது.

P2

வேத ஞானத்துக்கு விஞ்ஞான விளக்கங்கள் - விஷ்ணு சுவாமி

இந்தியாவின் வேத கால சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள ஏராளமான விஷயங்கள் தற்போதுள்ள விஞ்ஞானங்களால் நிரூபிக்கப் பட்டுள்ளன. நவீன விஞ்ஞானத்துக்கு வேத ஞானங்கள் மிகவும் ஒத்ததாக விளங்குகின்றன.

அவ்வாறு நிரூபிக்கப் பட்டவைகளில் கீழ்க்காணும் விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளைக் குறிப்பிடலாம்:
- சமுத்திரத்தின் அடி ஆராய்ச்சிகள் (உதாரணம்: துவாரகா)
- இந்து சரஸ்வதி நதி மண்டலங்களைத் துணைக் கோள்(satellite) மூலம் எடுத்த படங்கள்
- தொல் பொருட்களை கார்பன் மற்றும் சூடு ஒளி முறைகளால் அவற்றின் காலங்களை

நிர்ணயித்த உண்மைகள்
- சாஸ்திரங்களில் கூறப்பட்டவைகளை, விஞ்ஞானம் மூலம் நிரூபிக்கப் பட்டிருத்தல்.
- தொல் பொருள் ஆராய்ச்சியில் கிடைத்த பழமையான பொருட்களில் பொறிக்கப் பட்டிருந்த மொழியும் எழுத்துக்களும்.
- இவையனைத்திலும் பின்னியிருக்கும் கலாச்சார தொடர்புகள்.

முன்னுரை

இந்தியாவில் நுழைந்த பற்பல அயல் நாட்டு அறிஞர்களும் வேதங்கள் அனைத்தையும் முதலில் வெறும் கட்டுக்கதைகள் என்று கூறி அவற்றை மட்டம் தாழ்க்க விரும்பினர். அவர்களில் மாக்ஸ் முல்லர் என்ற அறிஞரைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். அவர் தன் கடைசி நாட்களில் வேதங்களைப் பற்றிப் புகழ்ந்தாலும், முதலில் அவர், "வேதங்கள், நாகரீக மற்றவைகள், அனைத்தையும் விடவும் மோசமானது" என்றும், "இந்தியாவை வித்தியாசமான கல்வியினால் ஆக்கிரமிக்க வேண்டும். அவ்வாறு அதன் மதத்தை அழிக்க வேண்டும்" என்றும் எழுதினார்.

ஆங்கிலத்தை இந்தியாவில் புகுத்திய தாமஸ் மக்கௌலி என்ற ஆங்கில அரசாங்க அதிபர் இந்தியர்களை இரத்தத்தாலும் நிறத்தாலும் மட்டுமே இந்தியனாகவும், மனம், ருசி, வழக்கங்கள், புத்தி, அனைத்திலும் அவர்களை ஆங்கிலத்தால் அடக்கிக் கொள்ள வேண்டும் என்று விரும்பினார்.

P3
ஆனால் ஆர்தர் சோப்பெனொர் என்ற ஜெர்மன் நாட்டு அறிஞரோ மேற்குறிப்பிட்ட அனைவரின் சமஸ்கிருத ஞானம் ஒரு பள்ளிச் சிறுவனின் அளவுக்கு மட்டுமானதே என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்தப் பழங்கால அயல் நாட்டு அறிஞர்கள்:
- ஆரியப் படையெடுப்பு என்ற கட்டுக் கதையை உண்டு பண்ணி வேத கால மகிமைகளை அழித்தனர்.
- ஆங்கிலக் கல்வியே எல்லாவற்றிலும் சிறந்தது என்று பறை சாற்றினர்.
- சமஸ்கிருத வாக்கியங்களை வேண்டுமென்றே தவறாக மொழி பெயர்த்தும் அர்த்தம் கூறியும் வேதங்கள் தாழ்ந்தவைகளென்று கூறினர்.
- இந்தியர்களை, தாங்களாகவே தங்கள் கலாசாரம் இழிமையானது என்று வெட்கப் பட வைக்க வேண்டுமென்று திட்டம் வகுத்து செயலாற்றினர்.
- இவ்வாறு அவர்கள் குறிப்பாக ஜாதி, நிற வெறியினால் இவை அனைத்தையும் செய்ததாகவே தெரிகிறது.
அவர்கள் அப்போது புனைந்த "ஆரியப் படையெடுப்பு" என்ற கட்டுக்கதை தற்போது மிகப் பெரும் வினாக்களை எழுப்பியுள்ளது. ஆனால் இன்றும் கூட இதையே தான் பள்ளிகளில் பாடமாகக் கற்பிக்கிறார்கள்.

இதோ "ஆரியப் படையெடுப்பு" என்ற கட்டுக்கதை...
- வேத கால ஆரியர்கள் 1500 BC க்கும் 1200 BC க்கும் இடையில் இந்தியாவில் நுழைந்தார்கள்.
- அவர்கள் அப்போது அங்கிருந்த திராவிடர்களை, தங்களுடைய உயர்ந்த அறிவாலும், குதிரைகள், இரும்பு ஆயுதங்களின் உதவிகளால் வென்றனர்.
- அவர்களே வேத சாஸ்திரங்களை "வெளியிலிருந்து" கொண்டு வந்தனர்.

இந்தக் கட்டுக் கதை இந்தியாவின் வேத கால நாகரீகத்தை அடியோடு மறைத்து விடுகிறது.

எல்லாப் பொக்கிஷங்களும் "வெளியிலிருந்து" வந்தது என்று கூறுகிறது.

மேலும், இந்தக் கட்டுக் கதை "ப்ராலியின் முரண்" என்ற குழப்ப விதியையும் எழுப்பியுள்ளது. ஒரு பக்கம், இந்த வேத கால சாஸ்திரங்கள் அனைத்திற்கும் தொல் பொருள் ஆராய்ச்சியின் நிரூபகங்கள் எதுவும் இல்லை. மறுபக்கம், சுமார் 2500 க்கும் மேலான தொல்பொருள் கண்டெடுக்கப் பட்ட இடங்களுக்கு எந்த விதமான சாஸ்திரங்களும் சம்பந்தப் படுத்தப்படவில்லை.

தற்போது கிடைக்கும் பற்பல சான்றுகளால் இவை இரண்டையும் சேர்க்கும் போது, உண்மை வெளிப்படுகிறது. இந்த 2500 இடங்களிலும் கிடைத்தவையே அந்த வேத சாஸ்திரங்கள்!

p4

"ஆரியப் படையெடுப்பு" கட்டுக்கதைக்கு மகா பெரும் சந்தேகங்களை எழுப்பும் உண்மைகள்!

- எந்த ஒரு வேத சாஸ்திரத்திலும் கூட, இந்தியாவின் வெளியில் ஆரியர்களுக்குத் தாய் நாடு இருந்தது என்று சரித்திரமே இல்லை! ஆனால் அவர்கள் சரஸ்வதி நதி தீரத்திலும் மற்ற இடங்களிலும் வாழ்ந்து வந்ததாக எழுதப் பட்டுள்ளது. இது நாள் வரைக்கும் உலகத்தில் எங்கேயுமே ஆரியர்கள் எங்கேயிருந்தார்கள் என்பதைப் பற்றி எந்த விதமான தொல்பொருள் கண்டுபிடிப்போ, கல் குறிப்போ, கலாசாரமோ, வம்ச சரித்திரமோ கண்டுபிடிக்கப் படவேயில்லை!
- இது வரையிலும் சுமார் 2500 தொல் பொருள் இடங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. அவற்றில் பெரும் பாலானாவை சரஸ்வதி நதி தீரங்களிலேயே துலக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் வேத காலத் தொடர்ச்சியை தெளிவாகக் காட்டுகின்றன. ஹரப்பா நாகரீகத்திலிருந்து இன்று வரையிலுமுள்ள நாகரீகங்களை அவை வெளிப்படுத்துகின்றன.
- சரஸ்வதி நதி ஏன் நீரின்றி வற்றியதென்பதைப் பற்றி நடத்திய பற்பல ஆராய்ச்சிகளும் 1900 B.C.E யைத் தான் உறுதியாகக் கூறுகின்றன.
- சரஸ்வதி நதி வற்றிய காலத்தை இவ்வாறு கணக்கிடும் போது, அது ரிக் போன்ற வேதங்கள் தோன்றிய காலத்தை 3000 B.C.E -க்குத் தள்ளுகிறது. அதுவே வேதங்கள் தோன்றிய காலம் என்று வேத வழக்கங்களும் ஒத்துக் கொள்கின்றன.
- மேலும் அயல் நாட்டு அறிஞர்கள் வேத காலம் 1500 BCE என்று கணித்ததை இப்போது விஞ்ஞான நிரூபகங்கள் அவைகளை தவறு என்று நிரூபிக்கின்றன

"ஆரியப் படையெடுப்பு" கட்டுக் கதையின் மூல கர்த்தா மாகஸ் முல்லர் என்பவர். வேத நாகரீகத்தின் கால நிர்ணயத்தை உறுதியாகக் கூற முடியாது என்று அவர் ஒத்துக் கொண்ட போதும், தன் "இந்தியாவின் ஆறு மார்க்கங்கள்" என்ற நூலில் அவர், "வேதங்களின் காலம் 1500 BCE யோ, அல்லது 15,000 BCE யோ, எப்படியிருந்தாலும் அவை உலக சாஸ்திரங்களில் மிகவும் தொன்மையுடன் அது தனக்கென்று ஒரு இடத்தைப் பிடித்துள்ளது" என்று எழுதியுள்ளார்.

வேத நாகரீகம் இந்தியாவின் சொத்து

வேத கால நாகரீகம் இந்தியாவுக்கே உரித்தான பெரும் சொத்து என்பதைத் தொல் பொருள் கண்டுபிடிப்புக்கள், மற்றும் விஞ்ஞான நிரூபகங்கள் மூலம் தெளிவாகத் தெரிகிறது.

உதாரணமாக, ஹரப்பாவில் கண்டுபிடிக்கப்பட்ட மொழி, கல் வெட்டுக்கள் அனைத்துமே வேத கால சம்பந்தப் பட்டவை. "ஓம்" என்ற அடையாளங்கள், அஸ்வதா அல்லது புனித ஆலமரம், ஸ்வஸ்திகா போன்ற மங்களமான அடையாளங்கள் அனைத்தும் வேதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் காணலாம். முண்டக உபநிஷத், கத உபநிஷத், பகவத் கீதை

அனைத்திலும் "ஓம்" என்பதைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

p5
ஐத்தரேயா மற்றும் சத்தபதா என்ற பிரமாணங்களில் அஸ்வத்தா என்ற புனித மரத்தைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் தைத்திரிய சம்ஹிதாவிலும் கடயான ஸ்மிருதியிலும் இதைப்பற்றி எழுதப்பட்டுள்ளது. பட மொழி சீல்களான இந்த ஹரப்பன் படங்கள் "புரோட்டோ ப்ராமி" என்ற, சமஸ்கிருதத்துக்கு முந்தைய மொழியையும் காட்டுகின்றன.

ஹரப்பாவின் அடிப் பகுதிகளிலிருந்து தோண்டி எடுக்கப் பட்ட மண் பாண்டங்களின் மேல் எழுதப் பட்டிருக்கும் எழுத்துக்கள், வேத காலத்தில் சரஸ்வதி நதி தீரத்திலிருந்த "இளா வர்தத்தே வர" என்ற இடத்தைச் சுட்டிக் காட்டுகின்றன.

மேலும் இங்கே காணும் நடனமாடும் பெண்ணின் உருவம், அவளது கை வளைகள் அனைத்தும் தற்போதும் வாழ்ந்து வரும் வட மேற்கு இந்தியப் பெண்களையும் அவர்களது அணிகலன்களையுமே ஒத்து உள்ளன. மேலும் 1940 ஆம் வருடம் M.S. வட்ஸ் என்பவரால் ஹரப்பாவில் தோண்டி எடுக்கப் பட்ட மூன்று சிவலிங்கங்களும் இதை உறுதிப் படுத்துகின்றன. இந்த சிவலிங்க வழிபாட்டைப் பற்றி மகா நாராயண உபநிஷத்தில் குறிக்கப்பட்டுள்ளது. இப்போதும் உள்ள இந்த சிவலிங்க வழிபாட்டையே யஜுர் வேதத்திலும் அப்போது கூறப்பட்டுள்ளன.

ஆரியப் படையெடுப்பைப் பற்றி கதை செய்த அயல் நாட்டு அறிஞர்கள், இந்திய நாகரீகம் தங்கள் ஐரோப்பாவின் நாகரீகத்தைப் போல் ஒத்துச் செல்லாததால் தான் அப்படிப் போலியான வரலாற்றை உண்டு பண்ணினார்கள். அவர்களது கதை இப்போது விஞ்ஞான மற்றும் தர்க்கங்களின் மூலம் எவ்வாறு அவை முழுக்கவும் தவறு என்பதை மிகவும் எளிதாக நிரூபிக்கப் பட்டுள்ளது.

p6
செயற்கைக் கோளின் படத்தில் வற்றிய சரஸ்வதி நதி!

நவீன கால விஞ்ஞானத்தின் படியும், செயற்கைக் கோள்கள் எடுத்துள்ள படங்களின் மூலமாகவும், காலத்தைக் கணிக்கும் கார்பன் விஞ்ஞான டேற்றிங் முறையாலும் வேதங்களில் குறிப்பிடப் பட்டுள்ள சரஸ்வதி நதியைப் பற்றி இப்போது தெளிவாகப் புரிய வருகிறது. அவற்றைக் கட்டுக் கதைகள்(mythology) என்று முன்னர் தவறாகப் பறை சாற்றியவர்களை அவை வெட்கப் பட வைக்கின்றன. ரிக் வேதத்தில், பழங்காலத்து சரஸ்வதி நதி, இமயமலையிலிருந்து புறப்பட்டு அரபுக் கடலில் முடிவதாக எழுதப் பட்டுள்ளது.

ப்ரக்சோதஸ தயாஸ ஸஸ்ர, ஏஸ சரஸ்வதி தருனமயஸி புகு
ப்ரபபதன ரத்யேவ யதி, விஸ்வ அபோ மஹின சிந்துரன்யஹ (ரிக் வேதம் 07.095.01.1-2)
"சுத்தமான நீரைக் கொண்டு மலையிலிருந்து தொடங்கி சமுத்திரத்தை நோக்கிப் பாய்கின்ற சரஸ்வதி நதி...."

மகிமை வாய்ந்த சரஸ்வதி நதியையும் அதைச் சார்ந்த வேத நாகரீகத்தையும் பற்றி ரிக் வேதத்தில் 50-க்கும் மேலான இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே ரிக் வேத காலம் சரஸ்வதி நதி வற்றுவதற்கும் முன்னாலிருந்திருக்க வேண்டும். மேலும், வேத காலம் சரஸ்வதி நதி வற்றுவதற்கும் முன்னால் இருந்திருந்தால், அது ஆரியப் படையெடுப்பு என்ற கட்டுக் கதையை மிகவும் கேலிக் கதையாக ஆக்குகிறது.

செயற்கைக் கோள்கள் எடுத்துள்ள துல்லியமான படங்கள், சரஸ்வதி நதி எவ்வாறு இமய மலையிலிருந்து தொடங்கி அரபுக் கடலை நோக்கி ஓடியது என்பதைத் தெளிவாக விளக்குகின்றன. இந்தப் படத்தில் சிந்து நதி (நீல நிறத்தில்) இடது பக்கத்திலும், சரஸ்வதி நதி (பச்சை நிறத்தில்) அடுத்தும் காட்டப் பட்டுள்ளன. இதில் கறுப்புப் புள்ளிகளாகக் காட்டப் பட்டுள்ளவைகள் வேத காலத்தில் சரஸ்வதி நதி தீரத்தில் குடியிருந்த குடியிருப்புக்களும், தற்போது தொல் பொருள் ஆராய்ச்சிகளால் தோண்டி எடுக்கப் பட்ட இடங்களுமாகும்.

சரஸ்வதி நதி வற்றியது 1900 B.C.E க்கும் முன்னர் என்பது தொல் பொருள் ஆராய்ச்சியாளர்களால் நிரூபிக்கப் பட்ட உண்மை. பூமியின் மேற்பரப்பின் அடியில் உண்டாகிய நகர்வினால் சரஸ்வதி நதியின் நீர் அதன் உப நதிகளான சட்லஜ், திருஷத்வதி போன்ற ஆறுகளுக்குத் திருப்பப் பட்டு சரஸ்வதி நதி வற்றியுள்ளது.

முன்னர், பழைய காலத்தில் நடத்தப் பட்ட தொல் பொருள் ஆராய்ச்சிகள், தாறு மாறான ஒன்றுக்கொன்று முரண்பட்ட முடிவுகளை அளித்திருந்தாலும், தற்போது ஜேம்ஸ் ஷாபர் என்பவரால் 1993 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆராய்ச்சியில், சிந்து மற்றும் சரஸ்வதி நதி தீரங்களில் எந்த விதமான வெளிநாட்டு படையெடுப்பையுமே காண முடியவில்லை. மாறாக, அந்த தேசங்களில் ஆயிரக்கணக்கான வருடங்களாக நாகரீகம் தொடர்ந்திருப்பதையே வெளிப்படுத்துகிறது.

சுருக்கமாகக் கூறினால் தொல் பொருள் ஆராய்ச்சிகளினால் ஆரியப் படையெடுப்புக்கு எந்த விதமான சான்றுகளும் கிடைக்கவேயில்லை.

p7
பழங்கால துவாரகா கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இந்தியாவின் சமுத்திர தொல் பொருள் ஆராய்ச்சி, தற்போது குஜராத்தின் பக்கத்தில் பழைய காலத்துத் துவாரகையைக் கண்டுபிடித்துள்ளது - வேத கால நூல்களில் இந்தத் துவாரகையைப் பற்றிக் கூறியவை அனைத்தும் இந்தக் கண்டுபிடிப்பால் நிரூபிக்கப் பட்டுள்ளன. மகா பாரதத்தில் இந்தத் துவாரகை கடலுக்குள் மூழ்கியதாகவும் அந்த கடல் துறை முகமான நகரத்தில் பிரம்மாண்டமான அளவுள்ள சுவர்களும், கடற் பாலங்களும், போர்த்தளங்களும், அலைதாங்கிகளும் இருந்திருப்பதாக எழுதியிருப்பவைகளை தற்போது கடலுக்குள் கண்டுபிடித்துள்ளனர்.

மகாபாரதத்தில் மௌசல பர்வதத்தில் கீழ் வரும் சுலோகம் துவாரகை எவ்வாறு கடலுக்குள் மறைந்தது என்பதைக் கூறுகிறது.

நிர்யதே து ஜனே தஸ்மின், சாகரோ மகர்லயஹ
துவாரகன் ரத்ன-சம்பூர்ணன், ஜலேன ப்லவயத்தத (மகாபாரதம், MP, verse 40)

"அனைத்து குடி மக்களும் வெளியே சென்றதும், எல்லாவிதமான பொக்கிஷங்களும் நிறைந்திருந்த துவாரகையை சமுத்திரம் வெள்ளத்தால் நிரப்பியது. எங்கெல்லாம் தரை தெரிந்ததோ அங்கெல்லாம் சமுத்திரம், தன் வெள்ளத்தால் நிரப்பிக் கொண்டது."

இந்தியாவில் சமுத்திர தொல் பொருள் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவராக Dr S.R. ராவ் என்பவர் பணயாற்றினார். அவர் முன்னின்று நடத்திய துவாரகையின் கண்டுபிடிப்பு, மகாபாரதத்தில் கொடுக்கப்பட்டுள்ள அவ்வளவு விவரங்களையும் சரியாக நிரூபிக்கிறது என்று கூறுகிறார். மகாபாரதத்தில் துவாரகையை கடலிலிருந்து மீட்டு எடுக்கப்பட்ட நிலத்தில்

கட்டியதாகவும், அவை புகழ் பெற்ற போர்க் கோட்டைகளைக் கொண்டிருந்ததாகவும், பின்னர், கடல் துவாரகையை அழித்து விட்டதாகவும் கூறியிருப்பது முழுக்கவும் சரியென்று கூறுகிறார். மேலும் அதே காலத்தில் சுமார் BCE 15 ஆம் நூற்றாண்டுக்கும் BCE 16 ஆம் நூற்றாண்டுக்கும் இடையில் கடல் மட்டம் மேலும் கீழும் சென்றதை நாம் பெஃரேன் நாட்டுச் சரித்திர நூல்களிலிருந்து அறிகிறோம்.

துவாரகையின் கண்டுபிடிப்பில் சில முக்கியமானவைகள் இவை: பிரம்மாண்டமான நகரத்தைச் சுற்றிய சுவர்கள், பெரிய கதவுகளின் கிண்ண மூட்டுக்கள், அரணுக்கு வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் புறப்பகுதி, கல்லினால் செதுக்கப்பட்ட வழிகள், பழைய கப்பல்களின் நங்கூரங்கள் - இவை அனைத்தும் துவாரகையை ஒரு துறைமுக நகரமாகக் காட்டுகின்றன. மேலும் ஹரி வம்ஸம் என்ற வேத கால நூலில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று தலையுள்ள சங்குகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது துவாரகையிலுள்ள ஜனங்கள் அனைவரும் தங்கள் தோள்களில் இதைப் பொறித்ததையும் விளக்குகிறது.

இவ்வாறு அங்கே சமுத்திரத்தின் கீழிலிருந்து கண்டு பிடிக்கப்பட்ட அனைத்துமே வேதகால நூல்களில் எழுதியிருப்பவைகளை மிகவும் தெளிவாக நிரூபிக்கின்றன.

p8
வட இந்தியாவின் 35 தொல் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள்

துவாரகாவைத் தவிர 35 க்கும் மேலான இடங்கள் வட இந்தியாவில் புராதான ஆராய்ச்சியால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவை அனைத்தும் மகாபாரதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வேத கால நகரங்களாகும். இந்த இடங்களில், செம்புப் பாத்திரங்கள், இரும்புப் பொருட்கள், முத்திரைகள், வெள்ளி தங்க ஆபரணங்கள், வர்ணங்கள் பூசப்பட்ட மண்பாண்டங்கள் அனைத்தும் கிடைக்கப் பட்டுள்ளன. காலம் கணிக்கும் கார்பன் விஞ்ஞான பரிசோதனையின் படி இவை அனைத்தும் ஆரியப் படையெடுப்பு கதைக்கு சாதகமற்றவைகளாகவே விளங்குகின்றன.

மேலும் மத்ஸ்ய புராணத்திலும் வாயு புராணத்திலும் ஒரு பெரும் வெள்ளத்தால் ஆன அழிவைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அது ஹஸ்தினாபுரத்தை அழித்து விட்டதால் அங்கே வாழ்ந்து வந்த அனைத்து ஜனங்களும் கௌஸாம்பி என்ற இடத்துக்குக் குடியேறினதாகக் கூறுகிறது. தற்போது கௌஸாம்பியில் நடத்தப்பட்ட தொல் பொருள் கண்டுபிடிப்பில் குறிப்பாக அங்கேயுள்ள நாகரீகம் அந்த வெள்ளத்தால் அழிக்கப்பட்ட காலத்துக்குப் பின்னால் தான் தோன்றியது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது!

குருஷேத்ரா

இதே போல் தான் மகாபாரதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குருஷேத்ராவும். தற்போது குருக்ஷேத்ரத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ள அம்புகள், ஈட்டிகள் அனைத்தும் 2800 B.C.E காலத்திலிருந்ததாக நிரூபிக்கிறது. அதே காலம் தான் மகாபாரத்தில் பாரத போரைப் பற்றிக் கொடுக்கப் பட்ட காலமும்!

மேலும், மகாபாரதத்தில், பாண்டவர்கள் வன வாசம் முடித்துத் திரும்பிய போது மூன்று நகரங்கள் பாண்டவர்களுக்குக் கொடுக்கப் பட்டதாக வருகிறது. அவை: பனிபிரஸ்தா, சோன பிரஸ்தா, இந்திர பிரஸ்தா என்பவை. இந்த இடங்களிலெல்லாம் தற்போது கண்டெடுக்கப் பட்டுள்ள பாத்திரங்கள், மற்றும் உபயோகப் படுத்தப்பட்ட பொருட்கள் அனைத்தும் எந்த விதமான முரண்பாடுமே இன்றி அவற்றின் காலம் மகாபாரத்தின் காலத்தையேக்

காட்டுகின்றன.

p9

## வேத சாஸ்திரங்களை மதித்த மகான்கள்

ஒரு சில அயல் நாட்டு அறிஞர்கள் வேண்டுமென்றே திட்டமிட்டு வேதங்களை வெறும் கேலிக்கான கட்டுக்கதைகள் என்று தாழ்த்திய போதும், வேறு பற்பல அயல் நாட்டு அறிஞர்கள் அதே வேதங்களை மிகவும் உயர்ந்த ஞானங்களின் இருப்பிடமென்றும் அவை உயர்தரமான எண்ணங்களுடன் எழுந்தவை என்றும் மதித்துப் போற்றி புகழ்ந்தனர்.

ஜெர்மன் நாட்டிலுள்ள ஆர்தர் ஷோபன்ஹௌர் என்ற மிகவும் புகழ் பெற்ற அறிஞர், "நான்... வேதங்களில் மிகவும் ஆழமான, உண்மையிலேயே அசலான உயர்ந்த ஞானங்களைக் காண்கிறேன். அவை மிக உயர்ந்த ஆன்மீக ஞானங்களைக் கொண்டுள்ளன.." என்று கூறியிருக்கிறார்.

அமெரிக்காவின் புராதன அறிஞரான ரால்ப் வால்டோ எமர்சன் என்பவர் வேதங்களைத் தினமும் படித்தவர். அவர், "பகவத் கீதைக்கு நான் ஒரு மகத்தான நாளை முழுவதும் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளேன்" என்று எழுதியுள்ளார்.

ஹென்றி டேவிட் தோரியோ என்ற அறிஞர், "ஒவ்வொரு நாள் காலையிலும் நான் உத்தமமான பகவத் கீதையின் அற்புதமான ஞானத்தில் குளிக்கிறேன். பகவத் கீதையின் முன், நம் நவீன காலத்து நூல்கள் எல்லாம் வெறும் அல்பமானவைகளே!" என்று கூறியிருக்கிறார்.

எமர்சனும் தோரியோவும் அமெரிக்காவின் மிகச் சிறந்த அறிஞர்கள். அவர்கள் தங்கள் நூல்களிலெல்லாம் வேத ஞானங்களை உபயோகப் படுத்தினர்.

இவ்வாறு வேதங்களின் மகிமைகளைப் பேசிய மற்ற அறிஞர்களில் ஆல்பர்ட் நார்த் ஒயிட்கெட் என்பவரும் ஒருவர். ஆங்கிலேய கணித மேதையும், தர்க்க ஞானியுமான அவர், "மனித வர்க்கத்தால் அளிக்கப்பட்ட மிகப் பெரும் ஆன்ம ஞான பொக்கிஷம் வேதங்கள்" என்று கூறியுள்ளார்.

அணுகுண்டை உண்டு பண்ணிய ஜூலியஸ் ராபர்ட் ஓப்பன் ஹைமர்," இந்த நூற்றாண்டின் மகத்தான விஷயம் வேதங்களே!" என்று கூறியுள்ளார். முதலாவது அணுகுண்டு வெடிக்கும் போது, அவர் பகவத் கீதையின் பதினொன்றாம் அத்தியாயத்திலிருந்து பற்பல சுலோகங்களைக் கூறினார். உதாரணம், " நான் தான் சாவு, இந்த உலகங்களின் அழிவுக்குக் காரணம்..."

ஓப்பன் ஹைமரிடம், இதுவா உலகத்தின் முதன் முதல் அணுகுண்டு என்று கேட்ட போது, "ஆம் இந்த நவீன காலத்தில் இது தான் முதல்." என்று பதிலளித்தார். அப்படியென்றால் இதற்கு முன்னால் பழைய காலத்திலும் அணுகுண்டு இருந்திருந்தது என்பது உள் பொருள்.

சைனாவின் புகழ் பெற்ற அறிஞரனான லின் யுதங்க் என்பவர், "சைனாவுக்கு திரிகோண விஞ்ஞானம், குவாட்ராடிக் சம கணிதம், இலக்கணம், மொழி ஞானங்கள் அனைத்தையும் கற்பித்தது இந்தியாவே தான்" என்று எழுதியுள்ளார்.

பிரான்ஸ் நாட்டு அறிஞரான பிரான்கோய்ஸ் வால்டைர் என்பவர், "நமக்கு, அனைத்துமே கங்கை நதிக்கரையிலிருந்து தான் வந்துள்ளது!" என்று கூறியிருக்கிறார்.

டெல்லி இரும்புத் தூண்

வேத நூல்களில் சில சமயம் நவீன விஞ்ஞான முறைகளை விடவும் சிறந்த முறைகளைகயும் காணலாம்.

நவீன காலத்து தாது விஞ்ஞான முறைகளினால் - 22 அடிகள் உயரத்தில் அவ்வளவு 'சுத்தமான' இரும்புத் தூணை இது வரையிலும் நாம் காண முடியாது. ஆனால் டெல்லியில் நிற்கும் இந்தத் தூண் பழங்காலத்திலேயே கைகளால் உண்டாக்கப்பட்ட ஒரு அதிசயமான தூண்.

இந்தத் தூண், பழங்கால இந்தியாவில் தாது விஞ்ஞானம் எந்த அளவுக்குத் தலை சிறந்திருந்தது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு. இந்தத் தூண் மூன்றாம் நூற்றாண்டில் (B.C.E) உருவாக்கப்பட்டது. சுமார் ஆறரை டன் பழுவான இந்தத் தூண், சுமார் 2000 வருடங்களுக்கு மேலும் கூட துருவே ஏறாமல் உள்ளது. மேலும் நாதிர்ஷா என்ற மன்னன் ஏவிய இராணுவ குண்டையும் கூடத் தாங்கிக் கொண்டு இன்றும் பலமுடன் நிற்கிறது. (நாதிர் ஷா 1737-இல் டெல்லியைத் தாக்கினான்).

வேத கால வான விஞ்ஞானம்

இன்னொரு முக்கியமான வேத கால விஞ்ஞானம், வான வெளியைப் பற்றியது. இதைப் பற்றி பற்பல நவீன விஞ்ஞானிகளும், கார்ல் சாகன், கௌண்ட் மௌரிஸ் மேட்டர்லிங்க் போன்ற மிகப் புகழ் பெற்ற மேற்கத்திய அறிஞர்களும் மிகவும் புகழ்ந்து பேசியுள்ளனர். அவர்கள் வேத கால வான வெளி சாஸ்திரங்கள் அனைத்தும் நவீன கால விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளுக்கு ஒத்துச் செல்வதைக் கண்டு வியந்துள்ளனர்.

கார்ஸ் சாகன், "வேத கால வான வெளி விஞ்ஞானம் மட்டும் தான் தற்போதுள்ள விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளுக்கெல்லாம் காலத்துக்கு ஒத்துள்ளது" என்று கூறியுள்ளார்.

நோபல் பரிசு பெற்ற கௌண்ட் மௌரிஸ் மேட்டர் லிங்க் என்ற அறிஞர்," (வேத கால வான வெளி விஞ்ஞானம்) எந்த ஒரு ஐரோப்பியராலும் நினைத்துப் பார்க்க முடியாத அளவு முன்னேறியிருந்தது" என்று எழுதியுள்ளார்.

பிரான்சு நாட்டு மேதையான ஜான் க்ளாட் பெய்லி என்பவர், வேத கால வான வெளி விஞ்ஞானத்தின் துல்லியத்தைக் கண்டு மிகவும் வியந்தார். "கிரேக்கர்களையும் எகிப்தியர்களையும் விட மிக உயர்ந்திருந்தது! .. வேத கால அறிஞர்கள் 4500 ஆண்டுகளுக்கு முன்பாகவே நட்சத்திரங்கள் மற்றும் கோள்களின் இயக்கங்களைக் கணக்கிட்டிருந்தனர். அவை நவீன கணக்குப் பட்டியலிலிருந்து ஒரு நிமிடம் கூட வித்தியாசமாக இல்லை!" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வேத காலத்தில் சுவய் ஜெய் சிங் என்ற ஜெய்ப்பூர் மன்னரால் கட்டப்பட்ட "சாம்ராத் யந்திரம்" என்ற 90 அடி உயரமான வான வெளி விஞ்ஞான இயந்திரம் இன்றும் நேரத்தை இரண்டு மணித்துளிகள் (seconds) கூட பிசகாமல் தினமும் சரியாகக் காட்டுகிறது!

வேத கால வான வெளி, மற்றும் பிற விஞ்ஞானங்கள் அனைத்தும் இந்தியாவிடம் வணிக, மற்றும் கலாசாரத் தொடர்பு வைத்திருந்த மற்ற நாடுகளிக்கும் பரவின. ரிக் வேதத்தில் சுமார் 100 இடங்களில், கடல் மற்றும் கப்பல் போக்கு வரத்தைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. அதைத்

தற்போதுள்ள சரித்திர அறிஞரான R.C மஜீம்தாரும் மிகச் சரியென்று கூறுகிறார். அவர், "இந்து - சரஸ்வதி நதி தீரத்திலுள்ள மக்கள் சூமா, மேற்கு ஆசியா, மற்றும் கிரீத் என்ற நாடுகளுடன் வியாபாரம் நடத்தியிருக்கிறார்கள்" என்று எழுதியுள்ளார்.

p11

ஹெலியோ டோரஸின் தூண்

அதற்கு நிரூபணமாக BCE 113 இல் ஹெலியோடோரஸ் என்ற கிரேக்கத் தூதரால் நாட்டப்பட்ட தூண் உள்ளது. ஹெலியோ டோரஸின் தூணில் பொறிக்கப் பட்டுள்ள வாக்கியங்கள் அவர் வைஷ்ணவத்துக்கு மாறியதைத் தெளிவாகக் காட்டுகின்றன. மேலும் அகத்தோகிளஸ் என்பவரின் BCE இரண்டாம் நூற்றாண்டு நாணயங்களில், ஸ்ரீ கிருஷ்ணர் மற்றும் ஸ்ரீ பலராமரின் உருவங்கள் பொறிக்கப் பட்டுள்ளன. இவையெல்லாம் சனாதன தர்மத்தின் காலம் கிறிஸ்துவின் காலத்துக்கு மிகவும் முன்பானவை என்பதை மிகவும் தெளிவாக்குகின்றன.

மேலும், இவை இந்தியாவுக்கு கிரேக்கம் முதலான பிற நாடுகளுக்கும் இடையே நடந்த கலாசாரச் தொடர்பை சுட்டிக் காட்டுகின்றன. இவ்வாறு இந்தியா பற்பல நாடுகளுடன் தன் கலாச்சாரம், பண்பாடுகள், தத்துவங்கள் மற்றும் விஞ்ஞான இரகசியங்களைப் பகிர்ந்து கொண்டுள்ளது. குறிப்பாக, கிரேக்கர்கள் இந்தியாவிடமிருந்து ஏராளமான அற்புதங்களைக் கற்றுக் கொண்டனர்.

வேத கால கணித முறைகள்

வால்டைர் மற்றும் மிகவும் புகழ் வாய்ந்த பிரான்சு நாட்டு அறிஞர்களும், "பித்தாகோரஸ் கங்கைக்குச் சென்று அங்கேதான் திரிகோண கணிதத்தைப் பயின்றார்" என்று எழுதியுள்ளனர். "கணிதத்தின் சரித்திரம்" என்ற நூலை எழுதிய ஆப்ரகாம் சீடன்பர்ஹ் என்பவர் பாபிலோனிருந்து, எகிப்து மற்றும் கிரேக்கம் முதலான உலகத்து அனைத்து இடங்களிலும், வேத காலத்து 'சுல்ப சூத்ரா' விலுள்ள கணித முறையே மூல காரணமாக விளங்கியதாகக் குறிப்பிடுகிறார்.

வால்டைர் மற்றும் சீடன்பர்ஹ் கூறியது போல் மிகவும் உயர்ந்த தரமான கணித முறைகள் இந்தியாவின் வேத காலத்தில் இருந்துள்ளன.

உண்மையிலேயே பித்தகோரஸ் கண்டுபிடித்த திரிகோணச் சட்டத்தை நாம் ஷத பத பிரம்மாணம் மற்றும் சுல்ப சூத்ராவில் காண்கிறோம். அவை பித்தகோரஸ் பிறப்பதற்கும் வெகு காலத்துக்கு முன்னால் தோன்றியவை.

மேலும், தற்போது பத்து என்ற எண்ணை அடித்தளமாகக் கொண்டு எண்ணும் முறையை வேத கால நூலான தைத்ரேய சம்கிதா(யஜீர் வேதத்தின் ஒரு பாகம்) வில் காண்கிறோம்.

பூஜ்யத்தை வெளிப்படுத்தியதும் மற்றும் அதை எண்களில் சேர்க்கும் விதங்கள் அனைத்தும் வேத காலத்துக் கணிதங்களே!

கணக்கிட முடியாத பெரிய எண்ணை(infinity) யும் வேத காலத்து கணிதம் அறிந்திருந்தது.

நவீன கால கம்பியூட்டர்களில் பூஜ்யத்தையும் ஒன்றையும் மட்டுமே உபயோகப் படுத்தும் கணிதத்தையும் வேத காலத்திலேயே அறிந்திருந்தனர். அதுமட்டுமல்லாமல், Google ஐப்போல்

தேடும் முறை (search), அதி தேடும் (hashing) முறைகள் போன்றவைகளைத் தென்னிந்தியாவில் இசை விஞ்ஞானங்களில் உபயோகப் படுத்தியுள்ளனர். அவர்கள் கதபயதி என்ற முறையை உபயோகித்து எந்த ஒரு ராகத்துக்கும் அதன் கணிகளைத் (notes) துல்லியமாகக் கணக்கிட அறிந்திருந்தனர்.

p12
வேத மந்திரமும் ஒலி விஞ்ஞானமும்

மந்திரங்களின் அற்புதமான சக்திகளை வேத நூல்கள் தற்போதுள்ள விஞ்ஞானங்களைப் போல் சரித்திர ரீதியாகக் கூறுவதில்லை. நாம் அனைவரும் எவ்வாறு ஒலிகள் நம்ப முடியாத வகைகளான விளைவுகளை உண்டாக்கும் என்பதை நன்றாகவே அறிவோம். உதாரணமாக ஒரு உச்ச ஸ்தாயிலுள்ள ஒலி அலைகள் ஒரு சாதாரண கண்ணாடிக் குவளையை உடைத்து விடுகின்றன. வலிமை மிகுந்த ஒலி அலைகள் பொருட்களை எவ்வாறு பலமாகப் பாதிக்கின்றன என்பதை நாம் காண்கிறோம்.

பொதுவாக, மந்திரங்களில் வினோதமான சக்திகள் அடங்கியுள்ளன என்பது அனைவரும் அறிந்த ஒரு உண்மை. வேத கால நூல்களில் நிறைய இடங்களில் இவ்வாறு மந்திரங்களால் உண்டான போர் ஆயுதங்களைப் பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளன. உதாரணமாக, குருக் ஷேத்திரத்தில் நடந்த மகாபாரதப் போரில் வித விதமான மந்திர ஆயுதங்கள் உபயோகப் படுத்தப் பட்டதாக விவரிக்கப் பட்டுள்ளதைப் பார்க்கிறோம்.

வேத காலத்தில் உபயோகப் படுத்தப் பட்ட பிரம்மாஸ்திரங்கள் தற்போது கண்டு பிடிக்கப் பட்டுள்ள அணு ஆயுதங்களைப் போன்றவை. அவற்றைப் பற்றி வேத நூல்களில் முழுக்கவும் நாம் காணலாம்.

இந்த மந்திரங்களில் மறைந்துள்ள ஆன்மீக சக்திகள், நாம் அவற்றைச் சரியாக முறையுடன் ஜெபிக்கும் போது நமக்குக் கிடைக்கின்றன. உண்மையில் வேதங்கள் முழுவதுமே இவ்வாறு மந்திர பலன்களால் நிறையப் பெற்றவை. அவற்றின் நிஜ வடிவமே மந்திர ஒலி அலைகள் தான். அவை ஆன்மீக விஷயங்களைக் கொண்டவை. பற்பல ஆன்மீக மார்க்கங்களும், மந்திரங்களால் தியானிப்பதையும், புலன்களை அடக்கி மௌனத்துடன் அவற்றை மனதில் ஜெபிப்பதையும், உரக்க அவற்றை சத்தமுடன் ஜெபிப்பதின் பலன்களைப் பற்றியும் அறிவுறுத்துவதை நாம் காண்கிறோம்.

ஒரு மருத்துவ ஆராய்ச்சியில், மந்திரங்களை ஜெபிப்பதால் வரும் விளைவுகளைப் பற்றி ஆராய்ச்சி நடத்தினார்கள். சராசரியாக 25 வயதுள்ள ஆண் பெண்களை மூன்று பிரிவுகளாக ஒவ்வொரு பிரிவிலும் 62 பேர்கள் வீதமாகப் பிரித்து அவர்களைத் தினமும் "ஹரே கிருஷ்ணா" மகா மந்திரத்தை 25 நிமிடங்கள் ஜெபிக்க வைத்தார்கள்.

ஆராய்ச்சியின் முடிவில், ஹரே கிருஷ்ணா மகா மந்திரத்தை ஜெபித்தவர்களுக்கு மன அழுத்தங்கள், இழிவு எண்ணங்கள், கெட்ட பழக்க வழக்கங்களுக்கு அடிமையாதல் போன்ற அனைத்தும் நீங்கப் பெற்றன. இவை அமெரிக்காவில் புளோரிடா மாநில கல்லூரியில் ஒரு டாக்டர் பட்டத்துக்கான ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப் பட்டவை.

ஆன்மீகத்தில் பயிற்சி செய்பவர்கள், மந்திர ஜெபங்கள் தங்களுக்கு ஆன்மீக அறிவு வளர்ச்சியையும், மன சாந்தத்தையும், கடவுளுடன் தொடர்புகளையும் உண்டு பண்ணுவதாகக் கூறுகின்றனர். இவை அனைத்தும் ஒருவன் முறையாக ஆன்மீக ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து மந்திரங்களை ஜெபிக்கும் போது முழுமையாகக் கிடைக்கிறது.

முடிவு

இந்த சிறு புத்தகத்தில் நாங்கள் குறிப்பிடப் பட்டுள்ளவை அனைத்தும் வேத நூல்களில் குறிப்பிடப் பட்டுள்ள வெறும் "அபர வித்யா" அல்லது "பூதவுலக ஞானங்களே" தான். உண்மையில் வேதங்களில் கூறப்பட்டிருக்கும் "பர வித்யா" அல்லது "ஆன்மீக ஞானங்கள்" தான் முக்கியமானவை. அவற்றையும் விட மேலான ஞானம், ஆன்மீக உண்மைகளைத் தானாகவே நேரில் உணர்ந்த முனிவர்களிடமிருந்து வருபவை. அவற்றை நவீன விஞ்ஞானங்களால் ஒருபோதும் அறியவே இயலாது. அவை பூவுலகங்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட சச்சிதானந்தம். அதைப் பற்றி விரிவாகக் கூறுவது இன்னொரு புத்தகம்!

p13

ரிஷி விஞ்ஞானிகளும் அவர்களுடைய மகா சாதனைகளும்

(1) ஆரிய பட்டர் (476 CE) (வான சாஸ்திரம் மற்றும் கணித வல்லுனர்)

ஆரிய பட்டர் 476 (CE) - ஆம் வருடம் பீகார் மாகாணத்தில் குசும்பூர் என்ற ஊரில் பிறந்தார். அவருடைய அதி புத்திசாலித்தனம் வான சாஸ்திரத்திலும் கணிதத்திலும் எல்லையை எட்டியது. 499 (C.E) ஆம் வருடம் தன் 23- ஆம் வயதில் வான விஞ்ஞானத்தில் ஒரு மகத்தான படைப்பையும் கணிதத்தில் "ஆரிய பட்டியம்" என்ற படைப்பையும் உலகத்துக்கு அளித்து அவர் மிகவும் உயர்ந்த நிலையை அடைந்தவர். அவர் கோளங்களின் இயக்கங்களையும் எப்போது சூரிய சந்திர கிரகணங்கள் வருமென்பது அனைத்தையும் மிகவும் துல்லியமாகக் கணித்தார். கோபர்நிகஸ் என்பவர் தனது ஹெலி ஸென்ட்ரிக் என்ற தத்துவத்தைப் பிரசுரிக்கப்பதற்கு சுமார் 1000 வருடங்களுக்கு முன்பே பூமி உருண்டையென்பதையும் அது ஒரு அச்சில் சுற்றுவதாகவும் வான வெளியில் அந்தரத்தில் அது மிதக்கிறது என்றும் கண்டு பிடித்து அறிவித்திருந்தார். மேலும் அவர் (Pi) என்ற கணித நம்பரை நான்கு தச ஸ்தானங்கள் வரை துல்லியமாகக் கணித்திருந்தார். அவர் கணித்த எண் 3.1416 என்பதாகும். மேலும் அவர் திரிகோண கணிதத்தில் சைன் அட்டவணையை உண்டு பண்ணியவர். நூற்றுக் கணக்கான வருடங்களுக்குப் பின்னர்(825 BCE) தோன்றிய மொகமத் இப்னா என்ற அரேபிய கணித வல்லுனர் ஆரியப் பட்டாவின் (Pi) யைப் பற்றிய கண்டுபிடிப்பைப் பற்றிப் புகழ்ந்தார். மேலும் அவர், "இது பூஜ்யத்தைப் பற்றிய உண்மை. இது இல்லாமல் நவீன கம்ப்யூட்டர்களே இல்லை. கணிதத்தில் ஆரிய பட்டர் மிகவும் பெரிய அறிஞர்" என்று கூறினார்.

(2) பாஸ்கர ஆச்சார்யா (1114 - 1183 CE)

பாஸ்கர ஆச்சார்யா மகாராஷ்டிரா மாகாணத்தில் ஜல்காவோன் அல்லது விஜ்ஜதித் என்ற ஊரில் பிறந்தவர். ஆல்ஜிப்ரா, ஜாமிட்ரி போன்ற கணித விஞ்ஞானங்களில் அவர் அளித்த பெரும் அறிவுகளினால் அழியாத புகழ் பெற்றவர். "லீலவதி" மற்றும் "பிஜகணிதா" போன்ற அவரது படைப்புக்கள் அனைத்தும் ஒப்பில்லாத மகத்தான பொக்கிஷங்கள். இவ்வுலகில் அவை பற்பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப் பட்டிருப்பதே அவற்றின் பெரும் மதிப்புக்கு நிரூபணமாக விளங்குகின்றன. அவர், தன் " சித்தாந்த சிரோமணி" என்ற பெரும் நூலில், கோள்கள் எவ்வாறு இயங்குகின்றன, அவற்றின் போக்கு, கிரகணங்கள் எவ்வாறு உண்டாகின்றன, வான விஞ்ஞானம், கணித முறைகள், வான வெளி ஆராய்ச்சிக்கு வேண்டிய உபகரணங்கள் - இப்படி அனைத்தையும் விவரமாக எழுதியுள்ளார். தன் "சூரிய சித்தாந்தம்" என்ற நூலில், "பொருட்கள் பூமியில் கீழே விழுவதன் காரணம் பூமியின் இழுப்பு சக்தியே. மேலும், பூமி, மற்றும் கோள்கள், நட்சத்திர மண்டலங்கள், சந்திரன், சூரியன் அனைத்தும் ஒன்றுக் கொன்றான இழுப்புச் சக்தியினால் தான் அவை தத்தம் அச்சுகளில் சரியாகச் சுற்றிச் கொண்டிருக்கின்றன " என்று எழுதியுள்ளார். எனவே, சர் ஐஸக் நியூட்டன் பூமியின் இழுப்புச் சக்தியைப் பற்றிக் கண்டு பிடிப்பதற்கு சுமார் 500 வருடங்களுக்கு முன்பாகவே முதலாவதாகக் கண்டுபிடித்தவர் பாஸ்கராச் சாரியாரே தான் என்பது மிகவும் தெளிவாகத் தெரிகிறது. அவர் எல்லாக் கணித அறிஞர்களிலும் மிக சிறந்தவர். பெர்ஷியா, மற்றும் ஐரோப்பிய வல்லுனர்கள் அனைவர்களும் பாஸ்கராச்சாரியாரின் கண்டு பிடிப்புக்களை விவரித்தும் ஆராய்ச்சி செய்தும் தான் மிகவும் புகழ் பெற்றனர்.

(3) கனட் ஆச்சாரியா (600 BCE)

இந்தியாவின் ஆறு சித்தாந்தத் தத்துவங்களில் ஒன்றான "வைஷேஷிக தர்ஸனம்" என்ற சித்தாந்தத்தைப் படைத்து மிகவும் பெருமை பெற்றவர் கனட் ஆச்சாரியார். அவர் குஜராத்திலுள்ள துவாரகையின் பக்கமுள்ள பிரபஸ் சேத்ரா என்ற இடத்தில் தோன்றியதாகக் கூறுவர். அவர் உண்மையம், தோன்றல் காரணம் மற்றும் அணு விஞ்ஞானம் இவற்றில் முன்னோடியாக விளங்கினார். அவர் அனைத்து மூலகங்களையும் ஒன்பது வகைகளாகப் பிரித்தார். அவை: மண்(பூமி), நீர், ஒளி, காற்று, ஆகாயம், காலம், இடம், மனம், உயிர் என்பவைகளாகும். "எந்த ஒரு பொருளும் அணுக்களால் ஒன்றுக் கொன்று சேர்க்கப்பட்டு அவை மூலகத் தனி மங்களாக ஆகின்றன" என்று கூறினார். இவ்வாறு அவர் அணு விஞ்ஞான அறிவுகளை ஜாண் டால்டனுக்கும் முன்னர் சுமார் 2500 வருடங்களுக்கு முன்பாகவே உலகுக்கு முதன் முதலாக அளித்தவர். மேலும் அவர் அணுக்களின் தன்மைகள், அவற்றின் இயக்கங்கள், அவை ஒன்றுக் கொன்று சேரும் இரசாயன விளைவுகள் அனைத்தையும் கண்டு பிடித்தவர். T.N. கோல்ப்ரூக் என்ற புகழ் பெற்ற சரித்திர ஆசிரியர், "ஐரோப்பாவிலுள்ள விஞ்ஞானிகள் அனைவர்களையும் விட, கனட் மற்றும் இந்திய விஞ்ஞானிகள் மிக உயர்ந்தவர்கள். அவர்களின் இந்த உலகத்துக்கே குருக்கள்" என்று எழுதியுள்ளார்.

(4) நாகார்ஜீனா (100 CE)

மத்தியப் பிரதேசத்திலுள்ள பலூகா என்ற சிறு ஊரில் தோன்றிய ஒரு அசாதாரணமான அறிஞர் நாகார்ஜீனா. அவர் சுமார் 12 வருடங்கள் ஆராய்ச்சி செய்து இரசாயனம் மற்றும் தாதுப் பொருள் விஞ்ஞானம் போன்றவைகளில் பற்பல கண்டு பிடிப்புகளுக்குக் காரணமானவர். அவர் எழுதிய "ரஸ் ரத்னாகர்", "ரஸ்ருதயா", "ரஸேந்த்ர மங்கல்" போன்றவை அனைத்தும் இராசாயனத்தில் மிகவும் புகழ் வாய்ந்த படைப்புக்கள். அப்போது இங்கிலாந்து போன்ற மற்ற நாட்டு விஞ்ஞானிகளெல்லாம் தோல்விகளைச் சந்தித்திருந்தாலும், நாகார்ஜீனாவோ தாதுப் பொருட்களை இரசாயன முறைகளால் எவ்வாறு தங்கமாக்கலாம் என்ற ஆராய்ச்சியில் வெற்றியும் பெற்றிருந்தார். அவர் "ஆரோக்ய மஞ்சரி" மற்றும் "யோக சாரம்" என்ற நூல்களை எழுதி, மருத்துவ உலகத்துக்குப் பேருதவி புரிந்தது மட்டுமின்றி, நோய்களைக் குணமாக்கும் மருத்துவத்துக்கும் உதவி புரிந்தவர். அவர் தன் பேரறிவால் மிகவும் உயர்ந்த நிலையிலிருந்ததால் அவரை அப்போது உலகப் புகழ் பெற்றிருந்த "நாளந்தா" பல்கலைக் கழகத்தில் தலைவராகவும் நியமித்தனர். அவரது விஞ்ஞானப் படைப்புக்கள் இன்றும் கூட அனைத்து நவீன விஞ்ஞானிகளையும் வியக்க வைக்கின்றன.

(5) ஸுஷ்ருத் ஆச்சாரியார்(600 BCE)

மருத்துவ விஞ்ஞானத்தில் மிகவும் உயர்ந்த இடத்தைப் பிடித்துள்ள இந்த மாபெரும் அறிஞர், விஸ்வாமித்ர முனிவருக்குப் பிறந்தவர். தன் "ஸுஷ்ருத் சம்ஹிதா" என்ற நூலில் அவர் ரண சிகிச்சைகளைப் பற்றி விரிவாக எழுதியுள்ளவை உலகத்துக்கே முதன் முதலாக அளிக்கப் பட்ட பொக்கிஷங்கள். அவரை பிளாஸ்டிக் சர்சரியின் தந்தை என்று கூறுவார்கள். ரண சிகிச்சையின் போது உபயோகப் படுத்தப்படும் மயக்க மருந்துகளிலும் அவர் முன்னோடியாக விளங்கினார். ஐரோப்பாவில் அப்போது ரண சிகிச்சை முறைகள் மிகவும் ஆரம்ப நிலையிலிருக்கும் போதே மிகவும் நுணுக்கமான "ரௌனோ பிளாஸ்டி" (சிதைந்த மூக்கை சரியாக்குதல்) போன்ற முறைகளைக் கையாண்டவர். அவர் தனது "ஸுஷ்ருத் சம்ஹிதா" வில் 12 விதங்களான முறிவுகளையும் 6 விதங்களான பிஸகுகளையும் குறிப்பிடுகிறார். மனித சிசு வளர்ச்சி விஞ்ஞானத்தில் அவர் வியக்கத் தகுந்த அறிஞராக விளங்கினார். ஸுஷ்ருத் சுமார் 125 விதங்களான ரண சிகிச்சை ஆயுதங்களை விவரிக்கிறது. அவை கத்திகள், ஊசிகள், குறண்டும்

ஆயுதம், இழுப்பவை மற்றும் குதத்தில் உபயோகிக்கும் ஆயுதம் இப்படிப் பற்பல விதங்களில் இருந்தன. பெரும்பாலான ஆயுதங்கள் மிருகங்கள், மற்றும் பறவைகளின் தாடைகளிலிருந்து உண்டாக்கப்பட்டவை. மேலும் அவர் பற்பல "தைக்கும்" முறைகளையும் விவரிக்கிறார். குதிரையின் முடியையும், மர உரிகளிலிருந்து உண்டாக்கப்பட்ட நார்களையும் ரணசிகிச்சையில் தைக்கும் நூல்களாக உபயோகப் படுத்துவதைப் பற்றியும் விவரித்துள்ளார். ஸுஷ்ருத் சம்கிதாவில் 300 விதங்களான ரண சிகிச்சை (operation) களைப் பற்றி விளக்கியுள்ளார். அவற்றில் உடலின் பாகங்களை வெட்டியெடுத்தல், வயிற்றைக் கீறி குழந்தையைப் பெற வைத்தல், தலையில் ரண சிகிச்சை என்பவைகளும் அடங்கியுள்ளன. இவ்வாறு ஸுஷ்ருத் ஆச்சாரியார் மருத்துவத்துறையில் மகத்தான இடத்தைப் பிடித்துள்ளார்.

6. வராக மிஹிரர் (499-587 CE)

தற்போது உஜ்ஜெயின் என்றழைக்கப் படும் அவந்தி என்ற நகரில் மன்னன் விக்கிரமாதித்தனின் அரச சபையை அலங்கரித்த மகா அறிஞர். ஒன்பது பிரதான அறிஞர்களில் மணி மகுடம் போன்றவர் வராக மிஹிரர். வான சாஸ்திரத்தில் அவர் எழுதிய " பஞ்ச சித்தாந்தம் " என்ற நூல் வரலாற்றிலேயே மிகவும் பெயர் பெற்றது. சந்திரன் மற்றும் கோள்கள் பிரகாசிப்பது அவை சூரியனிடமிருந்து பெற்ற பிரதிபலிக்கும் ஒளியே என்று அப்போதே அவர் கண்டிருந்தார். மேலும் தனது "பிருகத் சம்ஹிதா", "ப்ருகத் ஜாதகம்" என்ற நூல்களால் அவர் பூகோளம், நட்சத்திர மண்டலங்கள், விஞ்ஞானம், உயிரியல் மற்றும் விலங்குகளைப் பற்றிய விஞ்ஞானம் இவையனைத்தையும் வெளிப்படுத்தினார். தாவர விஞ்ஞானத்தில் அவர் மரம் செடி கொடிகளுக்கு உண்டாகும் நோய்கள், அதன் மருந்துகள் அனைத்தையும் கண்டு பிடித்திருந்தார். வான சாஸ்திரம், ஜாதகங்கள் போன்ற விஞ்ஞானங்களில் அவர் அளித்துள்ள பொக்கிஷமான ஞானங்களால் இந்த அறிஞர் இன்னமும் நம்மிடம் வாழ்ந்து வருகிறார்.

7. பதஞ்சலி முனிவர் (200 BCE)

இந்தியா இந்த உலகத்துக்கு வழங்கியுள்ள ஒரு மகத்தான பொக்கிஷம் யோக விஞ்ஞானமாகும். யோக அப்பியாசங்களின் மூலம் எவ்வாறு உயர்ந்த உண்மைகளை அறியலாம் என்பதை அது விளக்குகிறது. யோக சாஸ்திரங்களைப் படைத்த பதஞ்சலி முனிவர் இந்தியாவில் உத்தரப் பிரசேத மாநிலத்தில் கோண்டா (கனரா) என்ற இடத்தில் தோன்றியவர். அவர் பிராணாயாமம் மூலம் எவ்வாறு உடல், மனம், ஆத்மாவை அடக்கத்துக்குள் கொண்டு வரலாம் என்று போதித்தார். அது ஒருவனுக்கு வெளிப்புறத்தில் ஆரோக்கியத்தையும் உட்புறத்தில் ஆனந்தத்தையும் அளிக்கிறது. பதஞ்சலி முனிவரின் 84 யோக அப்பியாசங்களும் ஒருவனுடைய சுவாச மண்டலம், இரத்த மண்டலம், நரம்பு மண்டலம், ஜீரண மண்டலம், நிண மண்டலம் மற்றும் பற்பல உடல் உறுப்புகளுக்கு ஆரோக்கியம் அளிக்கிறது. மேலும் அவர் யமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்யாஹாரம், தியானம், தாமம் போன்ற அங்கங்களினால் ஒருவன் எவ்வாறு கடைசியில் சமாதி நிலையை அடைய முடியும் என்று 8 அங்கங்களையும் விரிவாக விளக்குகிறார். இந்த யோக அப்பியாசங்கள் தற்போது எங்கிலும் பரவுவதற்குக் காரணம், அதன் விஞ்ஞான மற்றும் எல்லோருக்கும் பயன்படும் காரணங்களாலே தான். இந்தியாவின் ஆறு ஆன்மீகக் கொள்கைகளில் பதஞ்சலியின் யோக சாஸ்திரமும் ஒன்றாகும். புலனடக்கம், ஆனந்தம், ஆத்ம ஞானம் உள்பட்ட விஞ்ஞானங்களில் பதஞ்சலி முனிவர் அழியா இடம் பெற்றுள்ளார்.

8. பரத்வாஜ முனிவர் (800 BCE)

இந்தியாவில் பிரயாக் என்ற புனித நகரத்தில் தோன்றிய பரத்வாஜ முனிவர் ஆயுர் வேதம் மற்றும் இயந்திர விஞ்ஞானத்தில் புகழ் பெற்றவர். அவர் எழுதிய "இயந்திர ஸர்வஸ்வா" என்ற நூலில், விமானம், மற்றும் ஆகாயத்தில் பறக்கும் இயந்திரங்கள், வான சாஸ்திரம் அனைத்தையும் எல்லோரும் பேராச்சரியம் அடையும் அளவு நுட்பமாக விளக்கியுள்ளார். அவர் 3 விதமான ஆகாய இயந்திரங்களை விளக்குகிறார்: (1) பூமியில் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குப் பறப்பவை, (2) ஒரு உலகத்திலிருந்து இன்னொரு உலகத்துக்குப் பறப்பவை, (3) ஒரு பிரம்மாண்டத்திலிருந்து இன்னொரு பிரம்மாண்டத்துக்குப் பறப்பவை. அவரது நுணுக்கமான ஞானம் இன்றைய நிபுணர்களை மிகவும் அதிசயிக்க வைத்துள்ளது. குறிப்பாக

அவர் அளித்துள்ள அதி நுணுக்கமான ஞானங்கள், அனைவரையும் திகைக்க வைத்துள்ளன: (1) ஆழமான இரகசியம்: சூரிய வெளிச்சத்தையும் காற்றையும் உபயோகப் படுத்தி விமானங்களைக் கண்களால் காண முடியாமல் செய்தல், (2) வாழும் இரகசியம்: மின்சார சக்தியை உபயோகித்து, கண்களுக்குத் தெரியாத விமானத்தைத் தெரியும் படி செய்தல், (3) கண்களுக்குத் தெரியும் இரகசியங்கள்: ஒரு விமானத்திலிருந்து கொண்டே இன்னொரு விமானத்தினுள் நடக்கும் விஷயங்களை அறிதல். இப்படி தன் அறிவு கூர்மையான கண்டு பிடிப்புக்களால் பரத்வாஜ முனிவர் வானுர்தி நுட்பங்களின் முன்னோடியாக விளங்குகிறார்.

9. கபில முனிவர் (3000 BCE)

புகழ் பெற்ற ஸாங்க்யா தத்துவங்களை உலகுக்கு அளித்த கபில முனிவர் 3000 B.C.E இல் கர்டம முனிவருக்கும் தேவகுதிக்கும் பிறந்தவர். அவருடைய முன்னோடியான தத்துவங்கள், பரமாத்மா, பிரக்ருதி, உலக சிருஷ்டிகளைப் பற்றியவை. அவர், எவ்வாறு சக்தியை ஒரு விதத்திலிருந்து இன்னொரு விதத்துக்கு எவ்வாறு மாற்றலாம் என்பதிலும் ஆத்மாவல்லாத ஜடப் பொருட்கள், அண்டங்களின் சூஷ்ஷமான விஷயங்கள் இவை அனைத்திலும் மிகவும் விளக்கம் அளித்தவர். பரமாத்மாவே தன் ஆட்சியினால் பிரக்ருதியை எல்லா சிருஷ்டிகளுக்கும் மூலமாகக் கொள்கிறது என்ற தத்துவத்தை அனைவருக்கும் விளக்கினார். அண்டங்களின் சிருஷ்டி ஞானத்தையும் அதன் இரகசியங்களையும் துல்லியமாக வழங்கியதால் அவரை அண்ட விஞ்ஞானத்தின் தந்தையாகக் கொண்டாடுகின்றனர்.

10. சரக்க முனிவர்(600 BCE)

வைத்திய ஞானத்தில் சரக்க முனிவர் மணி மகுடம் போன்றவர். அவர் எழுதிய "சரக்க ஸம்ஹித" என்ற நூல் ஆயுர்வேதத்தின் அறிவுக் களஞ்சியமாகும். நோயைக் கண்டுபிடித்தல், நோயைக் குணமாக்குதல் போன்றவற்றில் அவர் அப்போது கையாண்ட முறைகள் ஆயிரக்கணக்கான வருடங்கள் தொடர்ந்து கடைப் பிடிக்கப்பட்டன. உடல் மற்றும் வைத்திய விஞ்ஞானம் ஐரோப்பாவில் தெளிவில்லாமல் பற்பல ஊகங்களுடன் அப்போது வெளிவந்தது. ஆனால் சரக்க முனிவரோ உடல் விஞ்ஞானம், மகப்பேறு, மருந்து இரசாயனம், இரத்த ஓட்டம் மற்றும் நீரிழிவு, காச நோய், இருதய நோய் அனைத்தையும் மிகவும் விளக்கமாகக் கண்டு பிடித்திருந்தார். தன் சரக்க ஸம்ஹிதாவில் சுமார் 10,000 மூலிகைகளைப் பற்றியும் அவற்றின் குணங்களைப் பற்றியும் எழுதியுள்ளார். அவர், முறையான உணவு, அமைதியான மனம் மற்றும் நற்செயல்களின் அவசியத்தை மிகவும் வலியுறுத்தினார். உடல் சுகாதாரமும் ஆன்மீக நோக்கமும் எவ்வாறு சம்பந்தப் பட்டவை என்பதை விளக்கினார். 200 வருடங்களுக்குப் பின்னர் "ஹிப்போகிரட்டிக் சபதம்" வருவதற்கு முன்னமே அவர் வைத்தியர்களின் ஒழுக்க நீதிகளை இயற்றியிருந்தார். ஆயுர் வேதத்துக்கு மிகவும் மகத்தான ஞானங்களை வழங்கியதால் அவர் என்றென்றும் சரித்திரத்தில் ஒரு மகா பெரும் ரிஷியாக விளங்குகிறார்.

(பின் அட்டை)

விஞ்ஞான நிரூபகங்கள் மூலம், வேத ஞானங்கள் விளித்து எழுகின்றன.

புது நம்பிக்கை பிறக்கிறது

சுமார் 600 வருடங்களாக இந்தியாவின் வேத தர்மங்கள் கொடுமையான இஸ்லாமிய மன்னர்களின் கைகளில் சிக்கி பெரும் அல்லல்கள் பட்டன. அதன் பின்னர் சுமார் 400 வருடங்கள் ஆங்கிலேயர்களின் ஆட்சியினால், ஏற்கெனவே குழப்பத்திலிருந்த வேத தர்மங்களை வெந்த காலில் குற்றுவதைப் போல் வேதனைப் படுத்தினர்.

பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ணர், எப்போதெல்லாம் வேத தர்மங்கள் அழிய ஆரம்பிக்கிறதோ அப்போதெல்லாம் தானே இந்தப் பூவுலகத்துக்கு இறங்கி வந்து திரும்பவும் தர்மங்களை நிலை நிறுத்துவதாகக் கூறுகிறார். ஏன்? வேத தர்மங்கள் அவரிடமிருந்தே தொடங்கி, அவரால் பாதுகாக்கப் பட்டு வருபவை. மேலும், அந்த வேத தர்மங்களின் மூல காரணமே அவரை அறிவதே!

சுமார் 523 வருடங்களுக்கு முன்னால் ஸ்ரீ கிருஷ்ணரே ஸ்ரீ சைதன்ய மகாபிரபுவாக இந்தியாவிலுள்ள மேற்கு வங்காளத்தில் அவதரித்தார். பிரம்ம - மத்வ - கௌடிய சம்பிரதாயம் வழியாக, அவர் அழிந்து கொண்டிருந்த வேத தர்மங்களுக்கு புது மூச்சை அளித்தார். அதன்பின், அவரது வழியில் வந்த ஆச்சார்யார்களின் மூலம் இந்தியாவில் வேத தர்மங்கள் மீண்டும் தழைத்து வளர்ந்தன.

1966 ஆம் வருடம் தன் குருதேவரின் கட்டளையின் படி A.C. பக்தி வேதாந்த சுவாமி பிரபுபாதா, ஸ்ரீ கிருஷ்ணரின் வேத வாக்கியங்களை மேற்கத்திய நாடுகளிலும் பரப்புவதற்காக அமெரிக்காவுக்குச் சென்றார். ஏராளமான அறிஞர்களும் நிபுணர்களும் ஸ்ரீ கிருஷ்ணரின் பக்தர்களானார்கள். இந்தப் பூவுலகத்திலேயே இதுவரை காணாதவாறு அவர் பெரும் வேதிய புரட்சியைத் தொடங்கி வைத்தார். இந்த உலகத்தில் எல்லோரும் அமைதியாக வாழ ஒரு மகத்தான வீட்டைக் கட்ட வேண்டுமென்பதே அவரது குறிக்கோள்.

அவ்வாறு வேத தர்மங்களை அவர் காட்டிய பாதையில், மேலும் தொடர்ந்து உலகெங்கும் பரப்புவதில், தற்போது ஸ்ரீல பக்தி வேதாந்த நாராயண மகாராஜா ஈடுபட்டுள்ளார். அவர் மனித ஜீவன்கள் பயன்படுவதற்காக எத்தனையோ வேத நூல்களை மொழிபெயர்த்தது மட்டுமின்றி, இதுவரை உலகத்தை 30 முறைகள் சுற்றி வலம் வந்தனர்.

எங்களைப் பற்றி:

கௌடிய வேதாந்த ஆர்ட்ஸ் & கல்ச்சுரல் ஸொஸைட்டியான நாங்கள் எங்கள் குருதேவரான ஸ்ரீல பக்தி வேதாந்த நாராயண கோஸ்வாமியின் கீழ், வேத ஞானங்களைப் பொது மக்களின் நன்மைக்காகப் பரப்பும் சேவையில் ஈடுபட்டுள்ளோம்.

இவ்வுலக மாயையில் சிக்கி, ஒழுக்கம் கெட்டு அழிந்து கொண்டிருக்கும் இளம் வயதினர்களை ஊக்குவிக்க மிகவும் பாடுபடுகிறோம். முறையான ஆன்மீக ஞானத்தைக் கற்பிக்கும் போது, ஒருவனின் இதயம் மாறுவது மட்டுமின்றி அவை தானாகவே அவனைச் சுற்றிலும் மாற்றங்களை உண்டுபண்ணும். நாம் நமது இறந்த காலத்தைப் பாடமாகக் கொண்டு, நிகழ்காலத்தை சரியாக ஆட்சி செய்து, வருங்காலத்துக்கு தயாராக இருக்க வேண்டும்....

மலேசியாவில் தொடர்புக்கு:

ராம் துளசி தாஸ் - 016-483-6483 / இலக்சுமண தாஸ் - 013-230-2491
கோத்தவர்: இலக்சுமண தாஸ் & ராமன் பிகாரி தாஸ்
தொகுப்பு: கிருஷ்ண தேவி தாஸி.
சிறப்பு நன்றி: சுவாமி விஷ்ணு அவர்களுக்கு